POSTMEN HERALD

3/4-56

September 1956.



" The Representatives of All India Postal Employees' Union Postmen & Class iv, Circle Union, Madras, led by Sri T. S. Ramanujam, M. A., Ll .B . (Lond) President, accorded a warm reception to Sri M. M. Philips, I. C. S , Director General, P & T., New Delhi, at the Meenambakkam Air Port at 2-50 p. m. on 25—9—56 by garlanding him.

Price : Annas 2.

POSTMEN HERALD

(*Hony, Editor*: Mr. T. S, RAMANUJAM, M. A., L. L. B. *London*)

PHONE : 88471

OFFICIAL ORGAN OF

THE ALL INDIA POSTAL EMPLOYEES' UNION,

POSTMEN & CLASS IV, MADRAS STATE

Vol. 2 | SEPTEMBER 1956 | No 2.

TREAT US FAIRLY

T. S. RAMANUJAM

Ever and anon assurances are being given, tall statements issued and stray acts of goodness trumpeted—all to proclaim to the World that the P & T Department is a Model Employer in this Welfare State. It is not infrequently claimed that this is the only Department which takes a genuine interest in the uplift of its employees by reserving 50% of the promotional avenues to its other lower grade staff. It is not long past since such magnificent utterances were made by no less a person than our Great Hon'ble Minister for Communications Sri Jag Jivan Ram himself. No day passes without drawing out encomiums and tributes for the postmen.

Why for the matter of that our beloved Prime Minister Bharat Ratna, Pundit Jawaharlal Nehru, only the other day while inaugurating the Stamp Centenary has asked all to remember the great burden that falls on the postmen who under all kinds of adverse conditions does his hard duty ? And alas; there are no category other than postmen & class IV staff who are treated very badly. What conveniences; what benefits and what gains accrue to the higher cadres are being progressively reduced as one goes lower in the ladder. The class I Officers enjoy the maximum benefits, the class II and the clerical cadres have their share of gains. The Postmen and allied cadres practically derive no advantages and while the class iv and ED are meted out a sub-human standard. Every chance of promotion for class iv is being subjected to severe tests only with a view to annul the grand announcements.

For instance, 50% of the vacancies, occurring in the postmen cadre are supposed to be reserved for class iv staff. But many an obstacle is placed in the fulfilment of this promise. First and foremost no facility is afforded for training oneself. Secondly age restriction is imposed. It may be noted that there is no such restriction for clerical cadres. Thirdly each candidate is required to put in certain specified years of service. After crossing all these hurdles a candidate must secure qualifying marks and

what is worse should get into the rank-all for a small postman's job.

The funny part is that such restrictions are not imposed for higher cadres. There, if one secures qualifying marks, he is kept on the waiting list. That at least can be conceded to these unfortunate class iv officials who secure qualifying marks in the test and that would also satisfy at least one important directive Principle in the Constitution which imposes the responsibility of uplifting the down-trodden.

We demand that the Department should try to uphold its own principles without ever making us point out the accusing finger at it. The Policy of trying to give something with one hand and snatching it away with the other must be put an end to.

The postmen and allied categories somehow pass out gloriously in the clerical tests. A few among these wish to become signallers. But they are debarred because they are declared as overaged. One wonders to comprehend this principle. A promotee may enter the Department at 20 years of age and is permitted to appear at the clerical test only after putting in 5 years of service. One wonders to comprehend the reasoning behind this; A packer or postmen does not get confirmed even after putting seven years of service. After this even he should pass the clerical test by which time he would be beyond 30 years of age. So we crave only a small change in the Rule. After all when Constitution itself is being amended what are these Rules. When so many exemptions are given in many cases, why not, an aspirant who is prepared to take the prescribed training and test in Telegraphy be encouraged to do so. Still it is said, that a packer can become a DG even; Oh, God, even if one does become so, it could not be because of the help rendered by This Department allegedly functioning under the benign influence of a Socialistic pattern of Society.

We only desire that we be treated fairly. We are here to give our life-flood for the quick growth of this Nation into a full-fledged Socialist State as contemplated by our great Panditji and we shall be **second to none** in that endeavour.

Long Live Bharat!

—(o)—

Interview with Sri C. T. David, Postmaster (Gazetted) Mount Road on 24-8-56

Minutes of the Conference with the Representatives of the All India Postal Employees' Union-Postmen & Class iv, Mount Road Post Office Branch, at 11 a.m on the 24-8-56.

The following were present at the interview:—

Representing the Department.

1. Sri C. T. David, Postmaster (Gazetted)
2. Sri Padmanaban,
3. Sri C. S. Babu Mudaliar.

Representing the Branch Union.

1. Sri T. Santanam, Secretary,
2. Sri A. K. Sivabushanam,
3. Sri M. K. Baktavatsalu,
4. Sri P. M. Krishnan.

1. Appointment of passed class iv as postmen:

A reply has been furnished in this Office letter No. B-1/Mt. Road/Rectt d/9-8-56 that there is no need for the selection of additional candidates as the number on the waiting list viz., 14 is considered sufficient to meet the current requirements. It being represented that one of the officials is completing the age of 40 years, special consideration to enlist him was requested. The matter was promised to be taken up with the Postmaster-General for orders.

2. Non-supply of uniforms:

The uniform for 1956-57 has already been indented for in April 1956 and the supply is still awaited. The matter will be pursued to enable an expeditious supply.

3. Furnishing statistical information to the Branch Union:

The list of authorised medical attendants is being completed and is still incomplete as replies are awaited from two hospital authorities. The list will be supplied to the Union as early as is possible.

4. Augmentation of sorting postmen:

The augmentation of the strength of sorting postmen is not satistically justified. However, the augmentation of the clerical strength for window sorting and withdrawal of one sorting postman from window sorting to beat sorting will be considered.

The point as to whether a L.R. sorting postman is admissible will be clarified and a reply sent to the Union.

5. Augmentation of postmen staff:

A proposal for nine additional posts of postmen were submitted to the Postmaster-General, Madras, in this Office letter No. A-31/LGS/II d/28-2-56. The Postmaster-General's sanction is awaited.

6. Sanction of 3 additional posts of L.B. Peons:

There is no statistical justification for 3 additional posts of L.B. peons. However, distances are being measured with a cyclometer and if statistics justify additional posts, a proposal will be submitted to the Postmaster-General, Madras, soon.

7. Supply of gradation list of sorting postmen, postmen and class iv staff:

The combined gradation list of sorting postmen, and postmen has to be compiled with the concurrence of the Presidency Postmaster, Superintendents of Post Offices, North and South. These Officers will be addressed in the matter. A copy of the gradation list will be supplied as soon as it is ready.

8. Supply of tables and stools for M.O. and TMO. postmen:

9. Supply of lockers and stools to postmen:

Director-General's sanction has been sought for, for incurring expenditure under this Head and as soon as the sanction is received tenders will be called for, for the supply of these items of furniture. The matter will be pursued.

10. Sanction of two additional posts of postmen for TMO Branch:

On the basis of statistics available, no justification exists for the augmentation of TMO postmen. The Union's contention that the spread-over of the work hours of the two TMO postmen of this Office well exceeds 8 hours and on this point alone additional TMO postmen are justified, will be examined in detail and action taken accordingly.

11. Sanction of a post of head postman:

This cannot be considered. But the question of sanction of a clerical post to mark beats on MOs, parcels etc. as would seem to be in existence in Madras G.P.O. will however be considered and action taken.

12. Repairing of fans in the Delivery Branch;

The matter will be taken up with the Divisional Engineer Telegraphs, Madras as also the question of provision of additional fan points in the delivery branch.

13. Calling upon boy peons to perform class iv duties:

The Group officers will be suitably instructed in the matter.

14. Provision of water facilities:

Buckets and a big drum fitted with a pipe for storing water will be supplied for the lavatory. The scavenger has been instructed in the matter of cleaning the lavatory in the morning

15. Providing coolies for postmen dropped:

16. Stopping the practice of giving postings to class iv in different branches every day:

8 class iv officials are brought on duty on Sundays. These have to be granted compensatory off during the following week, apart from the grant of casual leave applied for. Hence such postings are inevitable. However, the Union's demand for the sanction of a class iv post to be utilised solely for the grant of compensatory offs will be taken up with the Postmaster-General, Madras, shortly.

The Conference closed at 12-20 hours,

NEWS FROM OUR BRANCHES

Chidambaram Branch

The annual General Body Meeting of the above union was held on 20—5—1956 at the union premises.

Sri P. M. Krishnan, General Secretary Madras.

The following were elected as office bearers for the year 1956—57.

PRESIDENT: Sri R. Govindarajam Pillai, Chidambaram.

VICE-PRESIDENT: Sri S. Manickam Pillai, Postman, Chidambaram.

SECRETRAY: Sri V. Krishnamurthy Pillai, Postman, Annamalainagar.

ASST. SECRETARY: (1) Sri Syed Mohamed, Postman, Chidambaram.

(2) Sri K. Perumal Chidambaram.

TREASURER: Sri V. Arumugam Postman, Chidambaram.

COMMITTEE MEMBERS: 1. Sri G. S. Sellathurai, Postman, Chidambaram

2. Sri S. Krishnaraj, Annamalainagar.

3. Sri K. Vaidyanathan, Postman Nanjaloor.

4. Sri A. Sadagoban, Postman, Bhuvanagiri.

5. Sri H. Abdul Raheem, Postman, Chidambaram.

6. Sri S. Jamamudheen, Postman, Annamalainagar.

ORGANIZER: Sri R. Kunjithapatham- Chidambaram.

AUDITOR: Sri J. Swaminathan, Postman, Chidambaram.

Mysore Branch

At the Annual General Body Meeting of the Branch Union held on the 28-7-56 the following were elected as Office Bearers for the year 1955-56

1. Sri B. N. Kenge Gowda, B.A., President.

2. Sri Haradaiah, Vice-President.

3. Sri R. E. Krishnamurthy, Secretary.

4. Sri M. Manchaiah, Asst. Secretary.

5. Sri M. S. Peerkhan, Treasurer.

6. Sri S. Krishnamurthy, Sri Siddaramiah, Auditors.

Sri V. Ramanath, B Sc., B. Com., G. Bernad, B.A., Off. Advisors.

Tiruvannamalai Branch

The Annual General Body Meeting of the Branch Union was held on the 5th August 56 under the presidency of Sri Palani Pillai, Chairman, Tiruvannamalai, Municipal Council. The following were elected as Office Bearers for the years 1956-57 :—

Sri A. Narayanaswami Mudaliar, B.A., B L., President.

Sri E. Chakrapani, Sri K. Subramaniam, Vice-Presidents.

Sri T. E. S. Murthuza, Secretary.
Sri S. Narayanaswami, Sri V. P. Arimuthu, Asst. Secretaries.
Sri T. Enayathulah, Treasurer.
Sri P. V. Balasubramanian, Auditor.

Tiruchengodu Branch

At the Annual General Body Meeting of the Branch Union held on the 15th July 1956, the following were elected as Office Bearers :—

1. Sri T. S. Pattabiraman, M.A., B.L., President.

2. Sri J. D. Ellis, Vice-President.

3. Sri Y. S. Arumugam, Secretary.

4. Sri S. M. Marimuthu, Sri M. Sheik Amir, Asst. Secretaries.

5. S. V. Pethuswami Naidu, Treasurer.

6. Sri M. R. Rajan, Auditor.

Interview with Shri A. N. Biswas, M.A.I.P.S. Director of Postal Services Madras at Ootacamund on 25-6-56

Minutes of the inierview granted to the All India Postal Employees Union, Postmen and Cl. IV, Ootacamund at Ootacamund on 25-6-56.

An interview was granted to the All India Postal Employees' Union, Postmen & Class IV, Ootacamund at the Postmaster's Office room on 25-6-56. The following were present :—

1. Sri A. N. Biswas, M.A., DPS Madras.
2. " G. Savarinathan, B.A., ASP Coimbatore.
3. " V.S. Alaghianathan, P.M. Ootacamund.
4. " N. Lingham, B.A., B.L., Member of Parliament President of the Union.
5. " Mohd. Khasim, Secretary.
6. " N. I. Narayanaswamy, Assistant Secretary.
7. " H. Boriah, Committee Member.

The following subjects were discussed. The Minutes of the discussion are recorded against each :—

1. Quarters for Postmen at Ootacamund.

The Preliminary estimate for the construction of quarters is expected to be ready shortly. This will be pursud.

2. Additional Sorting Postmen at Ootacamund.

The question of sanctioning additional Sorting Postmen to the Ooty H.O. will be urgently looked into by the Circle Office. The Superintendent will take this up immediately with the Circle Office.

3. Cycles or Cycle allowance for Postmen Nos. 5, 6 and 14 at Ootacamund.

This proposal will be examined by the Postmaster, Ootacamund and the proposal sent to the Superintendent of Post Offices, Nilgiri Dn. who will in turn take it up with the Circle Office.

4. Additional Postmen for Ootacamund H.O,

The President of the Union stated that the question had been raised as there was difficulty in the grant of short leave to the Postmen for want of substitutes. The Postmaster said that the difficulty was solved hence as the candidates in the waiting list had since become available. The President did not, however, pursue the issue of augmentation of Postmen's staff in the circumstances. However, the question of augmentation of Postmen's strength in Ootacamund H.O. will be examined by the Superintendent of Post Offices and proposals submitted to the Circle Office if necessary.

5. Suggestion to convey mails from Mettupalayam to Coty by special van.

The Postmen represented that if the mails came early they could finish their best delivery work and return to office earlier and this is why they were interested in this suggestion. This suggestion will be examined.

6. Supply of Khaki Uniforms instead of Khadi Khaki uniforms in the hills.

The President agreed that this issue may not be pursued very far. It was, however, felt necessary to point out to the All India Village Industries and Khadi Board at Bombay through the Circle Office that Khadi Khaki of thicker varieties should be

supplied to people of the hills in view of the very cold weather obtaining here.

7. Request for supply of woollen Banians and socks as in the case of telegraph officials.

This will be examined by the Circle Office.

8. Holiday O.T. Allowance to all Cl.IV officials.

This will be examined by the Circle Office.

9. Allowing Village Postmen to stay in Villages instead of returning to HO. the same day.

The President of the Postmen's Union pointed out that the postmen serving in the villages were finding it difficult to return to Head Post Office the same evening and suggested that they might be allowed to come the following morning, 30 villages are required to be served by the village postmen bi-weekly. The question of opening some more branch offices in these villages or in the alternative, sanctioning EDDAs will be examined.

Madras.-2.
3—8—'56.

(A.N. Biswas.)

Copy to:—

(i) The Branch Secretary, Postmen & Cl.IV Union, Ootacamund.

(ii) the Circle Secretary, AIPE Union, Postmen & Cl IV Madras. 2.

(iii) the Supdt. of P.Os, Nilgiri. the H. A. (U), PMG's Office Madras. 2.,

Interview with the Director General of P. & T.

Memorandom of grievances submitted

The All India Postal Employees Union, Postmen and Class IV, Madras Circle had an interview with the Director-General, of the P. & T. Department at the Postmaster-General's Office at Madras to-day. The Union President gave a memorandum of grievances relating to extension of medical aid to the families of Class IV officials, promotion chances to Class IV officials, and their recruitment without the medium of Employment Exchanges, creation of Jamedars' Posts in Post Offices as in other Sections of the P. & T. Department, supply of uniforms of good quality cloth, supply of umbrellas without artificial rainfall and temperature tests, and the compulsory holding of examinations every year for all non-third form Class IV officials for promotion to the Postman's cadre.

The Director-General Mr. Philips I.C.S. gave a sympathetic hearing and promised to go into the grievances. The Postmaster-General, Major P. K. S. Chari, who was also present, promised to examine the position in regard to the grievances and do his best. Mr. T. S. Ramanujam was assisted in the interview by Sri R. Ethirajulu, T. Santhanam, and R. Bakthavatsalam.

Madras,

26th September 1956.

LETTER FROM THE D. G. P. T, NEW DELHI

Copy of letter No. PE. 43–33/55 dated the 12th April 1956 from the Director General, Posts and Telegraphs, New Delhi, to All Heads of Circles and Administrative Offices and copy for information was forwarded to All D. As. G. P & T, All P & T Unions and TE & SPB Secs.

Sub: Permanency of Temporary Posts.

It has been decided with the concurrence of the Ministry of Finance (Communications) that temporary posts in categories other than these specified in this office Memo No. PE 31–80/54 dated the 21-1-1955 should be made permanent on the following basis :—

(a) In Circle offices and other Adminstrative offices, e.g. General Managers, District Managers etc. except Offices of Accounts Officers, Telephone Revenue—— 50% of the temporary posts which have been in existence for over two years on 1–3–56, and are required on a permanent basis.

(b) In other offices:—All temporary posts which have been in existence for over two years on 1–3–56, and are required on a permanent basis except the posts of Engineering Supervisers.

2. The posts in establishments which are transitory, temporary or experimental in character and those which are related to specific projects, e.g. Calcutta Project, Bombay Project etc. are not covered by these orders and should not be made permanent.

3. Immediate action may now be taken to implement the decision in respect of posts which you are competent to create. In respect of posts for which Director-General's or the President's sanction is required, proposals for permanency should be sent to this office.

AM-13. Delhi, the 23rd July 1956.

Copy to all the Circle, Loca and Divisional Secretaries, of All India Postal Employees Union Postmen and Class IV, for information.

"Nawal" Deputy General Secretary.

LETTER FROM THE C. H. Q. NEW DELHI

Copy of letter No. AV-1 dated 2nd July 1956 received from the Dy. General Secretary, C.H.Q. New Delhi.

Sub: Deducation of M. O. commission from the quota of subscription remitted to the C. H. Q. Delhi-6,

It has been observed that some of the Union are in the habit of deducting M. O. commission paid by them on the remittance of the amount as quota of subscription to C. H. Q. at Delhi which is irrugular.

It is therefore requested that no deduction of any sort from the quota of subscription due to the Circle, C. H. Q. and Federation be made in future and it should be remitted in full bearing the cost of remittance from the funds at their disposal.

With greetings.

(Sd.) M. P. Salwan,
for Dy. General Secy.

LETTER FROM THE N. F. P. T. E, NEW DELHI

Copy of letter No. SPB–51–5/56 dated 30–5–56 from DGPT., New Delhi, to the NFPTE., New Delhi and then copy to this Office with Number F/43 (Cl. IV) dated 1–6–56—

Sub: Revision of leave rules for class iv staff.

"I am directed to refer to your letter No. F/43/ (cl. IV) dated 3–5–56 on the above subject, and to say that the general question of liberalisation of leave rules for class iv staff is under active consideration of Government."

Copy to all the Branch, Division and Circle Secretaries for information.

(Sd.) Jamna Dass Akhtar,
Dy. General Secre

Fare-Well Address Presented to
Sri G. VENUGOPAL NAIDU

Deputy Sub-Postmaster, Mount Road P.O.
On the eve of his Retirement from Service

DEAR AND RESPECTED SIR,

We have assembled here this evening to bid you farewell upon your retirement from a long and devoted service in our Department which has for its motto the glorious ideal "Service before self."

While we are happy at the prospect of your getting freed from the shackles of official work and responsibilities and at the privilege we have of wishing you happiness and peace on the eve of your retirement, we are at the same time depressed by the thought that you will no longer be in our midst in the office to cheer us by yur benevolent smile and to guide us with your advice born of ripe experience in the Department.

You have taught us, Respected Sir, by example and precept the virtues of obedience, reticence, conscientious work and caution. We solicit your blessings so that we may be enabled to stand by what we have learnt from you.

Allow us, Dear Sir, to wish you a long and well-earned rest and a serene life of sweet retirement,

We remain, Dear and Respected Sir,

Mount Road P.O.
21st July 1956

Your affectionate colleagues,

Members of
The Mount Road Postal Staff Social Society.

Fare - Well Address Presented to
Sri P. N. PURUSHOTHAM NAIDU

Supervisor, Mount Road P. O. on the eve of his Retirement from Service.

DEAR SIR,

On this selfsame evening when we have bade farewell to our benign Deputy Sub-Postmaster, it has become our unenviable lot to bid farewell to you too, another stalwart on the staff of this office.

You have been with us for over two years now, and within this period you have impressed yourself on the memory of us all as a gentleman of tenacious purpose and unflinching devotion to duty. Your coming over to this Unit on promotion in 1954 has been fortunate; for, this office benefited much by your able guidance in matters of administrative routine, when early next year its status was raised to Gazetted Rank.

We had all expected that you would continue with us for several more years to guide us with your valuable advice born of manifold experience on the administrative side of the Post Office. But, to our deep misfortune, it appears to have been ordained otherwise. We use the words 'Our Misfortune. advisedly, for, Dear Sir, what else could it be if a simple and rectifiable ophthalmic condition should come to be regarded in your case as a bar to continued service? Our hearts are heavy-laden at having to lose the company in office of you who have been to many of us a refuge and an able counsellor in need.

Inspired by your own example of steadfast devotion to the duty undertaken, we hereby cast our gloomy thoughts, and cheer up to bid you farewell.

May your eyes be speedily restored to normalcy, may your life of retirement be long and peaceful, and may you have every happiness, is the wishand humble prayer of,

Mount Road P.O.
21st July 1956

Your affectionate colleagues,

Members of
Mount Road Postal Staff Social Society.

புகழுரை போதும்·
புதுவாழ் வளியுங்கள்

(T. S. R.)

'தாபால்காரர்களைப் போன்ற பொதுநல சேவையாளர்கள் எவருமே இருக்க முடியாது!'

'தபால் இலாகாவைப் போன்று பொது நலத் தொழிலாளர்க்கு ஜீவிதமளிக்கும் ஸ்தாபனமும் இச் சுதந்திர இந்தியாவில் வேறொன்றுமே இருக்கமுடியாது!'

என்று, எங்குமே —எல்லோராலுமே —புகழ்ந்துபாராட்டக் கூடிய அளவில், அரசியலாருஞ்சரி; இலாகாவின் உயர்தர அதிகாரிகளும் சரி; தபால் இலாகாவைப் பற்றியும், அதனின் அருமைசிப்பந்திகளைப்பற்றியும் சென்ற விடமெல்லாம் மிகப் பெருமிதமாக இவ்வாறுதான் பறைசாற்றிக் கொண்டு வந்த வண்ணமிருக்கின்றனர்.

நாட்டின் முதலமைச்சர் பண்டித நேருமுதல், தபால் நிர்வாகத்தின் பொறுப்பமைச்சர் கனம் ஜகஜீவன்ராம் வரையில், தபால்காரர்களையும் நான்காம் வகுப்பு சிப்பந்திகளையும் இவ்வாறுதான் புகழுரைகளாலும், முகஸ்துதிகளாலும் வாய்மூடி வைத்தவண்ண மிருக்கின்றனர்.

"வாரீர், ஜகத்தீரே! கேளீர்புவியீரே! வாய் திறந்து குறைசொல்ல முடியாத இலகா எமது தபால் இலாகா! நெறிவழுவா கடமை செய்யும் நோக்குள்ளோர்...... வெய்யில் அஞ்சார்; மழைக்கஞ்சார்; கடுங்குளிர்க்கும்— நெடும்வாடைக்கும், புயற் கொடுமைக்கும் பனித்தூறலுக்கும் அஞ்சார்......! அஞ்சார்......நிச்சயம் அஞ்சார்!! காரியமாற்றும் கண்ணியங் கொண்டோர்— கடமை செய்யும் உணர்வு பெற்றோர்.....! அவர்களால் நாம்——நம்மால் அவர்கள்...! ஆகவே அவர்களின் வேதனை எமக்கு விருந்தல்ல; அவர்கள் கண்ணீர் எமக்குப் பன்னீரல்ல; எனவேதான் அவர்களுக்கு எல்லா சலுகைகளையும் வாரித் தருவதெனத் தீர்மானித்திருக்கிறோம்.... அவர்கள்வாழ்வை உயர்த்துவோம்; வாழ்க்கைத்தரத்தையும் மாற்றுவோம்; பாரீர்! பாரீர்! இலாகாவின் 50% சதவிகித காலிஸ்தானங்களை அவர்களுக்கே ஒதுக்கித்தந்திருக்கிறோம்! அவர்களின் வாழ்வு மலர, மலர எமது இலாகா நிச்சயம் மணம்பெறும்!! வாழ்க அவர்கள்!! என்ற அளவில் அவர்களின் புகழுரையும், வாழ்த்துரையும் தான் வளர்ந்த வண்ணமிருக்கிறது? தவிர, செயலிலே எந்தஒர்நன்மையும் தெறித்தெழுவதாகவோ— எட்டிப்பார்ப்பதாகவோ நமக்குத் தெரியவில்லை! பேசுகிறார்கள்; கேட்கிறோம் ஆவலுடன்! மீண்டும் மீண்டும் பேசுகிறார்கள்—மீண்டும் மீண்டும் எண்ணத்தை ஆவலால்தான் நிரப்பிக்கொள்கிறோம்! அவ்வளவுதான், ஆனால் பலன்......என்ன...? யார் அதனைக் கூட்டிப் பெருக்கிச்சேர்த்துத் தொகுத்துக் காட்டமுடியும்?

பெங்களூரிலே பேசும்போது கனம் ஜெகஜீவனர் நாம் மேலே எடுத்துக்காட்டி யிருப்பதைப் போலத்தான் சங்கநாதம் புரிந்திருக்கிறார். பாரதத்தின் ஏன்— புகழ்மிகு ஒளிரத்தின மாம் பண்டித நேரு அவர்கள் கூட ஸ்டாம்பு நூற்றாண்டு விழாவிலே கலந்து கொண்டு பேசுகையில் இவ்வாறுதான் வாயாரப் புகழ்கிறார் தபால்காரர்களின் சேவையை......! ஆனால் அந்தப்புகழுரைகள் மட்டும் போதுமா என்று பார்க்கின்ற நேரத்திலேதான் நமக்கு வேதனை பிறக்கிறது!

புகழுகிறவர்கள் புது வாழ்வுக்கு மட்டும் வழி சொல்வதில்லை! வாழ முடியாமலும், சாக முடியாமலும் தொல்லை பல அனுபவித்து வரும் லட்சோப லட்சம் நன்றியுள்ள தொழிலாளர்களுக்கு புது வாழ்வளிக்க வழி வகைகளை அவர்கள் காட்டாது விடுவது மட்டுமல்ல; அவர்கள் நிலைமைகளைக் கூட சீர்தூக்கிப் பார்த்துத் தெளியவும் அவர்கள் முற்படுவதில்லை. அவர்களைப்பற்றி மேடையில் பேசும் நேரத்தைத் தவிர வேறு நேரங்களிலே அவர்களை நினைக்கவும் முயற்சிப்பதில்லை......!

இதனை நாம் ஏன் இவ்வளவு வேதனையோடு குறிப்பிடுகிறோ மென்றால், நம்மிடையே மல்கிக் கிடக்கிற தாறுமாறுகள் இன்னமும் தீர்ந்த பாடா யில்லாததாலேயாகும்! நமது வேதனைகளையும், குறைபாடுகளையும் அறிய முடியாமலும், அறிந்தாலும் பரிகரிக்க முடியாமலும், இருப்பவர்களுக்கு நாம் தெளிவாக இதனை மீண்டும் மீண்டும் எடுத்துக் காட்டிக்கொண்டே இருக்க வேண்டியிருக்கிறது.

புகழுரைக்கும், அன்புரைகளுக்கும், வாழ்த்துரைகளுக்கும் செவி சாய்த்துச் சாய்த்து மந்திரிகளால் அவ்வப்போது கொடுக்கப்படும் பல வாக்குறுதிகளால் கட்டுண்டு கிடக்கும் நம்மவருக்கு, அரசியலாராலும் சரி, இலாகாவினராலும் சரி என்ன அப்படி பெரும் பெரும், சலுகைகளும் வசதிகளும் அவர்கள் சொல், செயலுக்கேற்ப

அளிக்கப்பட்டிருக்கிறது என்று அவர்களுக்கு நாம் பாடம் படித்துக் காட்ட வேண்டித்தானிருக்கிறது.

தபால் இலாகாவில், வர்ணாச்சிரம தர்மத்தைப் போல பிரிக்கப்பட்டிருக்கும் நான்கு வகுப்புகளில் கடைசியிலேயுள்ள தபால்காரர்கள்—நான்காம் வகுப்புச் சிப்பந்திகளின் தொழில் தரமும்—வாழ்க்கைத் தரமும் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டு அவர்கள் எந்த அளவுக்கு மிகக் கேவலமாக நடத்தப்பட்டு வருகின்றனர் என்பதை இலாகாவின் நிர்வாகிகள் சோதித்து உணர வேண்டும்—இன்றுள்ள நிலையில் யாரே அவர்கள் கொடுமைக்குள்ளாக்கப்பட வில்லை—வாழ்கையின் இறுதி கட்டத்திற்கே துரத்தியடிக்கப்பட வில்லை—உயரும் வாய்ப்பு அளிக்கப் படாமலிருப்பதில்லை என்று நேர்மையான ரீதியில் வாதாட முடியுமென்று கேட்கிறோம்!

எவ்வளவு தடைக்கற்கள் அவர்களின் வளர்ச்சிப்பாதையிலே போடப்பட்டிருக்கின்றன என்பதை எவரே அறிய முடியும்......? பாலைவனத்திலே வாழுகிறவனை தினம் நாலு தடவை குளித்து விட்டு வா என்பதைப்போல பிரமோஷன் விஷயத்தில் அதிக தடைக்கற்களை வாரியிறைத்து விட்டிருந்தால் எவரே வேதனைப் படாமலிருக்க முடியுமென்று கேட்கிறோம்......?

இன்று முதலாம் வகுப்புச் சிப்பந்திக்குக் கிடைக்காத ராஜயோகம் என்ன இருக்கிறது...! இரண்டு மூன்றாம் வகுப்புக்காரர்களுக்கு அவர்களின் பங்கிற்கேற்பக் கிடைக்காத வசதியோகம் என்ன இருக்கிறது...? ஒன்றுமில்லையே....... என்ன குறையவர்களுக்கு? ஆனால் 4-ம் வகுப்புச் சிப்பந்திகளின் நிலை இன்று எப்படி இருக்கிறது..? தபால்காரர்களின் இன்னல் வாழ்வு இன்று எப்படி இருக்கிறது......? என்ன அவர்கள் குறிப்பாகப் பெறும் நன்மைகள்......? என்ன அப்படி அவர்களுக்குப் பிரமோஷன் வாய்ப்புகள் எந்த ஒரு தடையும் ஷரத்துக்களுமில்லாமல், இனிப்பைப்போல வாரி வழங்கப் பட்டிருக்கின்றன...? எல்லா பிரமோஷன்களுக்கும் அவர்களுக்குப் பரிட்சை யுண்டல்லவா......? அதில் அவர்கள் எத்தனை நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியிருக்கிறது......? மற்றவர்களுக்கெல்லாம் இது போன்ற நிபந்தனைகள் உண்டா என்று கேட்கிறோம்!

உதாரணமாக, தபால்காரர் வேலைகளுக்கு 50% சதவிகித காலி ஸ்தானங்களை நான்காம் வகுப்புச் சிப்பந்திகளால் நிரப்பிக் கொள்ளலாமென்பது இலாகாவுக்குக் கிடைத்திருக்கும் உத்திரவென்றால் இதில் இந்த நான்காம் வகுப்புச் சிப்பந்திகளுக்கு எவ்வளவு நிபந்தனைகள் விதிக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பார்க்கின்ற நேரத்திலே தான்—'பாலைவனத்திலே தினத்திற்கு நாலு தடவை குளித்து விட்டுவா!' என்று சொல்லுகிறவர்களுடைய கவனம் நமக்கு வருகிறது! இந்த பிரமோஷனை அவர்கள் பெற அவர்களுக்கிருக்கும் தடைக்கற்களைத்தான் கொஞ்சம் பாருங்களேன்.

1. முதன் முதலில் அவர்களுக்கு பரிட்சை விஷயமாக படித்துத் தேற—விஷயங்களை அனுபவ ரீதியாக விளக்கிக் கொள்ள—எந்த ஒரு வாய்ப்பும் அளிக்கப் படாமலிருப்பது—

2. இரண்டாவதாக, பிரமோஷன் பெறும் தகுதியுடையவர்கள் ஒரு குறிப்பிட்ட வயதிற்குட்பட்டவர்களாகத்தானிருக்க வேண்டுமென்று வற்புறுத்துவது. (ஆனால் இது போன்ற வயதுத் தடை மூன்றாம் வகுப்புச் சிப்பந்திகளுடையது என்பது மிக முக்கியமாக கவனிக்கத்தக்கது!)

3. மூன்றாவதாக, பரிட்சையில் அமருபவர்கள், அமருவதற்கு முன் ஒரு குறிப்பிட்ட ஆண்டுகளின் சர்வீசை உடையவர்களாக இருக்க வேண்டுமென்று வற்புறுத்துவது. இந்த தடைக்கற்களையெல்லாம் அவர் கடந்து விட்டான பிறகு.................பரிட்சையில் அவர் தேர்ச்சி பெறுமளவிற்கு அதிக மார்க்குகளை வாங்கியிருப்பவராகவுமிருக்க வேண்டும்.

இவ்வளவு வேஷமும் பொட்டு ஆடியான பிறகு கிடைப்பது என்ன தெரியுமா...... ஒரு போஸ்ட்மேன் வேலை...! அதுவும் நிலையில்லாத அளவில்...!! ஆனால் இவ்வளவு நிபத்தனைகளும் மற்ற வகுப்பினருக்கு இருக்கிறதா என்று பார்த்தால்... அப்போதுதான் தெரியும்... இலாகாவின் விளைவு நெளிவுகள்...!!! மற்ற வகுப்பினருக்கு இந்த நிபந்தனைகளை இலாகா விதிப்பதில்லை. கருணை காட்டுகிறது! சட்டத்தை வளைத்துக் காட்டுகிறது...! நம்மிடம் தான் கூர்மையாக்கி நீட்டுகிறது!! மற்ற வகுப்பினர் ஏதோ தேர்ச்சி பெறுவதற்கான மார்க்குகள் வாங்கி விட்டால் அது ஒன்றே போதும் வேலையுயர்வைப்பெற... ஆனால் நமக்கோ பாலைவனமாக இருந்தாலும் நாலு தரம் குளித்தாக வேண்டுமென்ற நிபந்தனை...? அதுதான் முறையா என்று கேட்கிறோம், எமக்கு நீங்கள் குவித்துத் தரும் வாழ்த்துக்களுடன் இந்த வேதனை நிபந்தனைகளையும் ஏன் கலந்துத் தர வேண்டும்...? மற்றவர்களுக்கில்லாத நிபந்தனைகளை

மற்றவர்களைக் கட்டுப்படுத்தாத சட்டங்களை ஏன் எமக்கு மட்டும் பரிசாகத் தரவேண்டுமென்று கேட்கிறோம்.

குறையில்லாமல் உழைப்பதற்காகவா இந்த பரிசை எமக்குத் தர வேண்டுமென்று கேட்கிறோம்! 50 சதவிகிதத்தை ஓர் புறத்திலே வாரித்தந்து உங்களுக்கும் சலுகை தருகிறோமென்று முரசறைகிறீர்கள்—ஆனால் மற்றொரு புறத்திலே நிபந்தனைகள் பலவற்றால் கொடுத்த உரிமையை பறித்துக் கொண்டே போய் விடுகிறீர்கள்...?இதனால் யாருக்கென்ன நன்மை? இதுதான் உழைப்பவருக்குத் தரும் நியதியா என்று கேட்கிறோம்.

சாப்பிடக் கூப்பிட்டு இலையருகே அமர்ந்தபின் வந்தவர்களை என்ன ஜாதி என்று கேட்கிறவர்களைப்போல சலுகை தந்த பின் அதனை நிபந்தனைகளால் பறித்துக்கொள்ள நினைப்பதும்—செய்வதும் யாருக்குச் சரியானதாக இருந்தாலும் சுதந்திர இந்தியாவில் சோஷியலிச அமைப்பை அமைக்க எண்ணிடும் மனப்போக்கினருக்கு மட்டும் அது உகந்ததல்ல என்பதை எடுத்துக்கூற விரும்புகிறோம். நீதியும் நேர்மையும் என்றும் வளையக் கூடாது! வளைந்துவிடும் செங்கோலும் கூர்மையில்லாத வாளும், நீதிபேணும் வீரனுக்கு என்றுமே பயன்படாது; பயன்பட்டாலும் விளைவு வேதனையாகத்தான் முடியும். அதைப்போலத்தான் பாரபட்சம் காட்டும் நிலைமையும்!

ஓர் கரத்தால் தருவது, மற்றோர்கரத்தால் தந்ததையே தாவிப்பறிப்பது என்ற துர்பாக்கியமான நிலை ஒரு பொறுப்புள்ள இலாகாவினரால் அனுஷ்டிக்கக் கூடாதஒன்று என்பதை தாழ்மையுடன் நாம் தெரிவித்துக்கொள்வதுமட்டுமல்ல; இலாகா எப்போதுமே நம்மைப்போன்ற வாய்ப்பும் வசதியுமற்றவர்களிடத்திலே நல்ல அனுதாபத்துடனும் அன்புடனும் நடந்துகொள்வதுடன் நாம் அதனைக் குறை கூற விரல் விடுத்து எழாத வகையிலும் இலாகா மிக கவனத்துடனும் பார்த்துக்கொண்டு அதற்கேற்ற அளவில் தங்களைத்தாங்களே அது திருத்திக்கொள்ளவும் வேண்டுமென்றும் சொல்ல ஆசைப்படுகிறோம்!

இனி அடுத்து தபால்காரர்களும், அதை யொட்டிய பகுதியினரும், கிளார்க்குகளுக்கென வைக்கப்படும் பரிட்சைகளில் ஏறதாழ வெற்றிகரமாகவே எழுதிதேர்ச்சியுமடைந்து வருகிறார்கள். இப்படிக் தேறியவர்களில் சிலர் சிக்னலர்களாக வர ஆசைப்படுகிறார்கள். ஆனால் இந்த நேரத்திலே அவர்களுக்கு நாம் மேலே சொல்லியிருப்பதைப் போன்ற நிபந்தனைகள் முன்னால் வைக்கப்படுகிறது. அவர்களுடைய உயர்வு முயற்சியை வயது ஆகிவிட்டதென்ற காரணங்காட்டி இலாகா புறக்கணித்து அவர்களை ஒதுக்கித்தள்ளி விடுகிறது. இது எந்த நியாயம் என்றே நமக்குப்புரியவில்லை ஒரு தோழர் தனது இருபதாவது வயதிலே இலாகாவிலே சேர்ந்தால் அவர் பரிட்சை யெழுதலாம் என்று தேர்ந்தெடுக்கப்பட அவர் 5 வருஷ சர்வீஸைக் கடந்தவராக இருக்கவேண்டும். இந்த வகையில் ஒரு சட்டமிருப்பதன் மூல நோக்கத்தை நம்மாலே புரிந்து கொள்ளவே முடியவில்லை; இதிலே அடங்கிக்கிடக்கும் ரகசியம் என்னவாகத்தானிருக்க முடியும்...! ஒருபோக்கரோ ஒருபோஸ்ட்மேனோ தாங்கள் ஏழு ஆண்டுகளின் சர்வீஸைப் பெற்றிருந்தாலும்கூட வேலையில் அவர்கள் ஊர்ஜிதம் பெற்றவராக இருக்க முடிவதில்லை. இதற்குப்பிறகு அவர்கள் பரீட்சை எழுத அனுமதிக்கப்பட்டால் அவருக்கு குறைந்த பட்ச வயது முப்பதாகிலும் ஆகிவிடும் என்பது நிச்சயம். எனவே இந்த விஷயத்தில் கொஞ்சம் தாராள மனப்பான்மையைக் காட்டினால் இலாகாவிற்கு என்ன அசௌகரியமேற்பட்டு விடுமோ நமக்குத் தெரியாது. இந்தியத்தாயகத்தின் அரசியல் சட்டங்களே பலவேளைகளிலே திருத்தப்படும்போது இந்த இலாகாவின் சில சட்டத்திலே ஒரு சிறு மாறுதலை யுண்டாக்கினால் ஒன்றும் குறைந்துவிடாதல்லவா...இதனை இலாகா தயவுடன் எண்ணிப்பார்க்கவேண்டும். இலாகாவில் பலருக்குப் பல நேரத்திலே சட்டத்தின் விதிவிலக்கும் கருணையும் கிடைத்திருக்கும்போது ஒரு உண்மையும் உணர்வும் கொண்ட ஏழை, அதுவும் வேண்டிய டெலிகிராப் பயிற்சியைப் பெற்றுத் தேறத் தயாராக இருக்கும்போது ஏன் அவர் ஊக்குவிக்கப்படக் கூடாது என்று மிகமிகத் தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறோம்!

இத்தகைய சிறு சிறு விஷயங்களில் கூட ஒரு விதிவிலககும் உற்சாகமும் அளித்து தபால் இலாகாவின் இதய நாடிகளை காப்பாற்ற இலாகாவும், அதிகாரிகளும் முன்வராத வரையில், புகழுரைப் பேச்சும்—ஒருபேக்கரும் டைரைக்டர் ஜனரலாக வரலாமென்ற முகஸ்துதிவாசகங்களும் பேசப்படுவதால் என்ன பயன்...?யாதுபிரயோஜனம்...!என்று கேட்கிறோம். சோஷியலிச அமைப்புக்கு முரசறைவோர் கவனிக்கவேண்டிய மிக மிக முக்கியமான சேதிகளல்லவா இவைகள்? எனவேதான் ஆட்சியாளரையும்—இலாகாவின் பிரதம நிர்வாகிகளையும், மிகத்தாழ்மையாகக் கேட்டுக் கொள்ளுகிறோம். தொழில்புரிவோருக்கு நல்ல வாய்ப்பை யளியுங்கள் சிறு சிறு கோளாறுகளால் அவர்களை எதையுமே செய்ய சக்தியற்றவராக ஆக்கிவிடாதீர்கள் புகழுரைகளால் அவர்களின் வாயை இறுக மூடிவிடாதீர்கள்! புகழுரைகளும் வாழ்த்துரைகளும் போதும் புதுவாழ்வளிக்க முற்படுங்கள்! அதுவே அவர்களின் உழைப்பிற்கு நாட்டின் போது நல சேவைக்கு நீங்கள் தரும் மகத்தான பரிசு—பதக்கம்—வாழ்த்து எல்லாம்,

---

திருவாளர் V. R. சௌந்தரராஜன் B. Sc.

அவர்களின் மாநாட்டுச் செய்தி

அகில இர்திய தபால் ஊழியர் சங்கம் மாநில செயலாளர் தோழர் பி. எம். கிருஷ்ணன் அவர்கட்கு, வணக்கம். தங்கள் மாநாட்டில் கலந்துக் கொள்ள எனக்கு வாய்ப்பு கொடுத்ததைப் பற்றி எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பல அசௌகரியங்கள் காரணமாக நான் அங்கு வராமைக்கு தங்கள் மன்னிப்பையும், அங்குள்ள மாநாட்டின் பிரதிநிதிகளின் மன்னிப்பையும் கோருகிறேன்.

தாங்கள் எனக்கு அளித்த கௌரவம், நான் செயலாளனாக தொண்டு புரியும் அட்மினிஸ்ட்ரேடிவ் சங்கத்தை சார்ந்தது. இச் சங்கத்தில் மூன்றாம் வகுப்பு தோழர்களும், நான்காம் வகுப்பு தோழர்களும் சிநேக மனப் பான்மையுடன் ஒரே கருத்து நோக்கத்துடன் உழைத்து வருவது தாங்களும், மற்ற நண்பர்களும் அறிந்ததே. சீரணைப்பு திட்டத்தின்படி நமது சங்கங்கள் ஒரே சம்மேளத்தின் கீழ் நிறுவப்பட்டு சுமார் 2 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இதுவரையில் எங்கள் சங்கத்தில் மூன்றாம் வகுப்பு அங்கத்தினர்களும், நான்காம் வகுப்பு அங்கத்தினர்களும் நமது சங்க அடிப்படை கொள்கைகளிலாவது அல்லது நோக்கங்களிலாவது எவ்வித வேற்றுமையான மனப்பான்மை ஏற்பட்டதில்லை. ஆனால் அதற்கு நேரடியாக, ஒருவரை பாதிக்கும் பிரச்சனையில், இன்னொருவர், எல்லாவிதமான ஆதரவையும், தோழமை மனப்பான்மையுடன் அளித்திருக்கின்றனர். உதாரணமாக எங்களது சங்கம் எடுத்துக்கொண்ட முயற்சி காரணமாக சென்ற ஆண்டு நான்காம் வகுப்பு ஊழியர்களில் ஆறு பேறுக்கு வேலை உயர்வு கிடைத்திருக்கிறது. அதாவது மூன்றாம் வகுப்பு சிப்பந்திகளாக உயர்த்தப்பட்டனர். மேல் கூறிய நபர்கள் சர்விஸில் ஜூனியர்களாக இருந்த போதிலும் சமீப காலத்தில் ஆள் குறைப்பு ஏற்பட்ட காலத்தில் இவர்களை விட்டு விட்டு சாதாரண மூன்றாம் வகுப்பு சிப்பந்திகளையே மற்ற அலுவலகத்திற்கு அரசாங்கத்தினர் மாற்றினர். இன்னொரு விஷயம் கடந்த பத்து மாதங்களாக நான்கு நான்காம் வகுப்பு தோழர்கள் இரவில் Watch man வேலைக்கு வராமைக்காகவும், பகலில் அதிகார பூர்வமாக இல்லாமல் வேலையை மாற்றி கொண்டதற்காகவும் Suspensionல் இருந்து வருகின்றனர். மேலும் அவர்களை ஏன் வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்யக் கூடாது என்று காரணம் காட்டும்படியாகவும் Memo கொடுக்கப்பட்டிருந்தது. இந்த விஷயத்தில் நமது இலாகா அதிகாரிகளால் உத்தேசிக்கப்பட்டுயிருக்கும் தண்டனை மேற்படி நான்கு நபர்கள் செய்த தவறுக்கு மிகவும், மிகவும் அதிகமென்றும், பொருத்தமில்லையென்றும் ஏகோபித்த திடமான அபிப்பிராயத்தை எங்கள் சங்கத்தினர்—மூன்றாம் வகுப்பு தோழர்களும், நான்காம் வகுப்பு தோழர்களும், உட்பட—வெளியிட்டியிருப்பதாலும் அந்த அபிப்பிராயத்தை மற்ற சங்கங்கள், சென்னை மாநில இணைப்பு குழுவின் மூலம் ஆதரித்ததாலும் நமது நோக்கம்ம் வெற்றி அடைந்துள்ளது. நான்கு தோழர்களும் Suspensionவிருந்து டிஸ்மிஸ் செய்யப்படாமல் வேலையில் மறுபடியும் சேர்க்கப்பட்டு, மற்ற சிறிய தண்டனை அடைய வேண்டும் என்றும், நமது இலாகா அதிகாரிகள் தீர்ப்பளித்துள்ளனர். இந்த விஷயத்தில் மூன்றாம், நான்காம் வகுப்பு வேற்றுமையின்றி நாம் தொழிற் புரியும் இலாகாக்களில், தபால் தந்தி தொழிளாலர்கள் யாவரும் ஒரே முகமாக தெரிவித்த அபிப்பிராய பலத்தினால் இன்று நமது தொழிற் சங்கம் இவ் விஷயத்தில் வெற்றி கண்டுள்ளது.

நாம் தபால். தந்தி, R.M.S. Engg. முதலிய பல இலாக்காகளில் பலதரப்பட்ட தொழில்களை ஆற்றினாலும், நமது சம்மேளனத்தின் ஆதரவில் எல்லோரும் ஒன்றுபட்டு, ஒரே குரலுடன், ஒரே நோக்கத்துடன், நமது பிரச்சினைகளை, பொது மக்களுக்கும், அரசாங்கத்திற்கும் எடுத்து உரைக்கின்றோம். அது மட்டுமின்றி நம்முள் ஒருவரை ஒருவர் புரிந்து கொள்கிறோம். நம்முடைய பிரச்சினைகள், தொழிற்கண் தோன்றும் இன்னல்கள் ஆகியவற்றை அடிப்படையாக கொண்ட கருத்துக்கள், கொள்கைகள், தத்துவங்கள் முதலிய எல்லா தொழிலாளர்களுக்கும் ஒன்றே ஒன்றுதான் என்று தெரிந்து கொள்கிறோம். அட்மினிஸ்ட்ரேடிவ் அலுவலகத்தைச் சேர்ந்த ஊழியராயினும் சரி, தபாலாபீஸைச் சேர்ந்த தொழிலாளியாயினும் சரி இருவருக்கும் ஒரே விதமான இட நெருக்கடியால் ஏற்பட்ட இன்னல்கள், துயரங்கள், R.M.S.ஐச் சேர்ந்த ஊழியராயினும் சரி, தந்தி இலாகாவைச் சேர்ந்த தொழிலாளியாயினும் சரி, ஒரே விதமான சிக்கல்கள், கஷ்டங்கள் முதலியவற்றை தான் பார்த்து அறிகிறோம். எனவே இத்தகைய சிக்கல்கள் நீங்க, நமது தொழிலாளர்களின் வாழ்க்கைத்தரம் உயர, சங்கங்களின் நலம் வளர அவர்களுக்குள் மன ஒற்றுமையும் ஜனநாயக பண்பாடும், உண்டாக்குவது இம் மாநில மாநாட்டின் கடமைகளில் ஒன்றாகும். இச் சிறந்த காரியத்தை இம் மாநாட்டில் கூடியுள்ள பிரதிநிதிகள் அனைவரும் வெற்றிகரமாக நிறைவேற்றுவார்கள் என்பதில் ஐயமில்லை. எனவே தங்கள் மாநில மாநாடு எல்லா துறைகளிலும் சிறப்புடன் நடந்து வெற்றிகரமாக முடிய வேண்டுமென்று எனது சங்கத்தின் சார்பில், ஆசிகளையும், நல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இங்ஙனம்,

V. R. சௌந்தரராஜன்

மாநில, செயலாளர்.

AIAOEA, PMG'S Office, Madras-2.

போஸ்ட் மாஸ்டர் ஜெனரலின் கடிதங்கள்

No. S.T.B-II-R. 82/1 சென்னை-2.

போஸ்ட் மாஸ்டர் ஜனரல், 14—5—56.
சென்னை மாவட்டம் சென்னை-2.

பொருள்:—தபால்காரர்கள்—நான்காம் வகுப்புச் சிப்பந்திகளின் எழுச்சிக்கு !

தபால்காரர்களும்—நான்காம் வகுப்புச் சிப்பந்திகளும்—அவர்கள் நிரந்தரமானவர்களோ அல்லது தற்காலிகமானவர்களோ — மொத்தத்தில் அவர்களுக்கு 5 வருஷ இடைவிடாத சர்வீஸ் இருந்தால் அவர்கள், S. S. L. C. பரீட்சையிலோ அல்லது அதற்குச் சமமான பரீட்சையிலோ அவர்கள் தேறியவர்களாக இருந்தால்—அவர்களெல்லாம் கிளார்க்குகளாக உயர்த்தப்பட தகுதியுடையவர்களாவார்கள். ஆனால் அவர்கள் வேலையில் சேர்ந்த பிறகு இந்தத் தகுதியை பெற்றவர்களாக இருக்க வேண்டும்—சில சிப்பந்திகள் காலேஜ் படிப்பிற்கு அருகதையில்லாமல், வெறும் S.S.L.C. பரீட்சையில் மாத்திரம் தவறிவிட்ட சில பாடங்களைத் தனியாகப் படித்து அதில் தேர்வு பெற்று விளங்கினால், அவர்களுக்கும் இந்த பிரமோஷன் கோரும் தகுதியுண்டு. ஆனால், அவர்கள் மட்டும் கீழ்கண்ட விகிதாசாரப்படி தங்கள் பாட திட்டங்களில் மார்க்குகள் வாங்கியிருக்க வேண்டும் :

(A) சென்னை அரசாங்கத்தின் கல்வி இலாகாவின் திருத்தி யமைக்கப்பட்ட கல்வி அமைப்பு விதியின் G. O. No. 1636 Law (Education) dated 3—8—1929-பின்படி அரசியலாரிடமிருந்து பாஸ் செய்த சர்ட்டிபிகேட்டுகளைப் பெற்றவர்கள் கீழ்கண்ட படி மார்க்குகள் வாங்கி யிருக்க வேண்டும்.

பொருள்:—	SCயும் STயும் அல்லாத மற்ற சிப்பந்திகள் மட்டும்	SCயும்-STயுமான சிப்பந்திகள்.
1. இங்கிலீஷ்	40 %	35 %
2. தாய் மொழி	40 ,,	35 ,,
3. கணக்கு	35 ,,	35 ,
4. சரித்திரம் பூகோளம்	30 ,,	30 ,,
5. விஞ்ஞானம்	30 ,,	30 ,,
6. இஷ்டபாடம்	35 ,,	மார்க்குகளுக்கும்

குறையாமல் மார்க்குகள் பெற்றிருக்க வேண்டும்.

(B) சென்னை அரசாங்கத்தாரால் திருத்தியமைக்கப்பட்ட செகண்டிரி கல்வி அமைப்பு முறை பின்படி அதாவது அரசாங்கத்தின் G. O. No. 1394 Education Dated 29—5—1948 என்ற உத்திரவுப்படி படித்துத்தேறி மார்க்குகளும் சர்ட்டிபிகேட்டுகளும் பெற்றவர்கள்.

பொருள்:—	S.C. & S.T. அல்லாதவர்கள் மட்டும்.	S.C. & S.T யாக இருப்பவர்கள்
1. முதல் மொழி இந்தி அல்லது பிராந்தியமொழி	40 %	35
2. இங்கிலீஷ்	40 ,,	40
3. கணக்கு	30 ,,	30
4. சோஷியல் பாடம்	35 ,,	35
5. ஜெனரல் சையின்ஸ்	35 ,,	35

கடிதம் 2 சென்னை-2

போஸ்ட் மாஸ்டர் ஜெனரலிடமிருந்து, 7—5—56

No. S. T. H. 60-32-S.V.

பொருள்:—இலாகா பூர்வமான ஸ்டாம்பு வெண்டர்களை நியமிப்பதைப்பற்றிய விதிமுறைகள்.

கீழ்க்கண்ட டைரக்டர் ஜெனரலின் கடிதம் மேற்படி விதிமுறைகளின் விளக்கத்திற்காகவும், எதிர்காலத்திய உபயோகத்திற்காகவும் அனுப்பப்படுகிறது.

கையொப்பம்: N. சுப்ரமணியம்,

போஸ்ட் மாஸ்டர் ஜெனரலுக்காக.

டைரக்டர் ஜெனரலின் ஜெனரல் சர்க்குலர்

பொருள்:—இலாகா பூர்வமான ஸ்டாம்பு வெண்டர்கள் நியமிப்பதைப்பற்றி விதிமுறைகள்;

சர்வீஸைப்பற்றி:

இலாகா பூர்வமான ஸ்டாம்பு வெண்டர்களே ஒரு குறிப்பிட்ட போஸ்டல் டிவிஷனிலோ—அல்லது ஒரு பிரசிடென்ஸி போஸ்டாபீஸிலோ அல்லது ஒரு முதல் கிரேடு போஸ்டாபீஸிலோ—அல்லது ஒரு சப் போஸ்டாபீஸிலோ—ஒரு A. கிரேடு பாஸ்ட் மாஸ்டரின் மேற் பார்வையின் கீழ் வேலைக்கு நியமிக்கப்படுவோர்கள்.

2. சம்பளமும் வசதியும்

இலாகா பூர்வமான ஸ்டாம்பு வெண்டர்கள், நான்காம் வகுப்புச் சிப்பந்திகளின் பட்டியலில் சேர்க்கப்படுவார்கள். அவர்கள் பென்ஷன் கோரும் தகுதியுடையவர்களாவர்கள். அவர்களின் சம்பள விகிதம் ரூ. 35—1—50 ஆகும். கிளார்க்குகளாக உயர்த்தப்படும் தகுதியுடையவர்களுக்குத் தேவைப்படுகின்ற திறமையை வரையறுக்கப் பட்டிருப்பதைப் போல இவர்களுக்கும் தங்கள் வேலைகளில் இத்தகையத் தேவைகளைப் பூர்த்தி செய்தால் பிரமோஷன் செய்யும் தகுதியுடையவர்களாவார்கள். ஆனால் ஹெட் 'போஸ்ட்மென் 'கேஷ் - ஓவர்சியர்' 'ரீடர் போஸ்ட்மென்' போன்ற பதவிக்காக கோருவதில் இவர்கள் கட்டாயி உரிமை எதனையும் பாராட்டமுடியாது.

குறிப்பு:

இலாகா பூர்வமான ஸ்டாம்பு வெண்டர்கள், மாகாணத்திலும் சரி, டவுன்களிலும் சரி, 11—1—50க்கு முன் வேலையில் நியமிக்கப் பட்டிருந்து அவர்கள் இந்த வேலைகளுக்குண்டான பழய சம்பள விகிதமான ரூ. 55—3—85லேயே சம்பளமும் வாங்கிக் கொண்டிருந்தால், அவர்கள் அந்தப்படியே இருக்க அனுமதிக்கப்படுவர். இவர்களின் சர்வீஸ் மட்டும் இடையில் விடுபடக்கூடாது.

3. வேலையில் சேர்த்துக்கொள்ளும் முறைப்பற்றி

வேலையில் எடுத்துக் கொள்வது என்பது பரீட்சை வைத்த பிறகேயாகும்—கீழ்க்கண்ட தகுதி பெற்றவர்களின் மனுக்கள் பரீட்சைக்கென ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) மத்திய பள்ளியின் இறுதி தேர்வையோ அல்லது அதற்குச் சமதையான தேர்வை பாஸ் செய்தவர்களும், வேலை தேடித்தரும் ஸ்தாபனத்தால் நியமிக்கப்பட்ட வருமானவர்களிடமிருந்து கிடைக்கும் மனுக்களும்—

(2) போஸ்ட் மென் டெஸ்டை பாஸ் செய்து விட்டு போஸ்ட் மேனுக தேர்ந்தெடுக்கப் படாமலும் — தேர்ந்தெடுக்கப்படுவர் என்ற சூழ்நிலையுமில்லாமல் இருப்பவர்களிடமிருந்து கிடைக்கும் மனுக்களும்...

(3) நிரந்தரமான அல்லது பகுதி நிரந்தரம் பெற்ற நான்காம் வகுப்புச் சிப்பந்திகள் (தபால் பிரிவில் சேர்ந்தவர்கள் மட்டும்) ஸ்டாம்பு வெண்டர்கள் வேலைக்குத் தகுதியுடையவர்கள் என்று கருதப்படுபவர்களிடமிருந்து பெறப்படும் மனுக்களும்;

(4) 5 வருஷ தொடர்ச்சியான சர்வீஸையுடையவர்களும், 40 வயதுக்கு குறைவாயுள்ளவர்களுமான பிரத்தியேக இலாகாவின் ஏஜெண்டுகளிடமிருந்து பெறப்படும் மனுக்களும்;

IV. வயது நிர்ணயம்

மேற்கண்ட A பிரிவிலுள்ளவர்கள் பரீட்சை நடக்கும் போது 19 வயதுக்கும் குறையாதவர்களும் 24 வயதுக்கும் அதிகப் படாதவர்களுமாகவும் இருக்கவேண்டும்—தாழ்த்தப்பட்டவர்களாகவோ—ஒதுக்கப்பட்ட மலை ஜாதியினராகவோ இருந்தால் அதிகப்பட்ச வயது வரையரையானது 24லிருந்து 29 ஆக உயர்த்தப்படும். மேற்கண்ட (C) பிரிவுகளின் இலாகா பூர்வமான சிப்பந்திகள் இந்த வேலைக்கான பரீட்சையில் அமரும்போது 40 வயதிற்கும் மேற்பட்ட வயதுடையவர்களாக இருக்க வேண்டும்.

V. தேர்ந்தெடுக்கப்படும் பரீட்சை முறை

ஒவ்வொரு தேர்ந்தெடுக்கும் பிரிவிலும் கீழ்கண்ட பரீட்சை முறைகள் அனுஷ்டிக்கப்படும்.

1. ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கையையும்—சில்லரைகளின் கணக்குகளையும் சீக்கிரம் கணக்கிட்டு பார்க்க முடிகிறதா என்று ஒரு சிறு பரீட்சை மூலம் சோதிப்பது.

2. ஒரு சிறு கணக்குப் பரீட்சையும்மன கணக்கும்.

3. பிறகு அவ்வந்த விண்ணப்பதாரர்களே—தனியாக தோற்றம் — குணம் இவற்றைப் பற்றி பொதுப்படையாக சோதிப்பது.

VI. தகுதிக்கேற்ற தேர்வு

சிப்பந்திகளின் தகுதிக்கேற்பவே அவர்கள் தேர்ந்தெடுக்கப் படுவார்களே யொழிய இலாகா பூர்வமான சிப்பந்திகளுக்கு தனிப்பட்ட முறையில் காலிஸ்தானங்கள் ஒதுக்கப்பட மாட்டாது.

VII. வைத்ய பரீட்சை

மேற்கண்ட C-யும் D-யுமான பிரிவுகளி

லுள்ள சிப்பந்திகளைத் தவிர்த்து (அவர்கள் தங்களை வேலைக் கெடுத்துக் கொள்ளப்படும் போது ஏற்கனவே பரீட்சை செய்துவிட்டபடியால்) மற்றவர்கள் வைத்திய சோதனை செய்யப்படுவர்.

VIII. தபால் தந்தி மேனுவல் 193 VOL,II ன் விதிமுறைகளில் சொல்லப்பட்டிருப்பதைப் போல தேர்ந்தெடுக்கப்பட்ட இலாகா பூர்வமான ஸ்டாம்பு வெண்டர்கள் ஒரு குறிப்பிட்ட ஜாமீன் தொகையைக் கட்ட வேண்டும்.

XI. **புரோபேஷன் காலம்**

அங்ஙனம் நிரந்தரமான காலி ஸ்தானங்களில் நியமிக்கபட்ட ஸ்டாம்பு வெண்டர்கள், முதலில் புரேபேஷனர்களாகவே அமர்த்தப்படுவர். இந்த புரோபேஷன் காலத்தில், வெளியாராகட்டும் இலாகா பூர்வமாகத் தேர்ந்தெடுக்கப் பட்டவராகட்டும், வேலையில் தகுதியில்லாதவரென்று காணப்பட்டால், அவர்களுடைய முந்திய வேலைக்கு அவர்கள் அனுப்பப்படுவார்கள்— வெளியாட்கள் விஷயத்தில் அவர்கள் வேலையிலிருந்தே நீக்கப்படவும் செய்வர். ஏற்கனவே ஸ்டாம்பு வெண்டர்களாக இருந்து பணியாற்றிக் கொண்டு வருபவர்களுக்கு மேற்கண்ட முறைகளிலிருந்து விதிவிலக் களிக்தப்பட்டிருக்கிறது.

பிரிவு உபசார விழா

திரு ஜி. வேணுகோபால் நாயுடு (டெப்டி பர்வைசப் போஸ்ட்மாஸ்டர் மவுண்ட்ரோடு) திரு. பி. என் புருஷோத்தம நாயுடு (சூப்ரைசர், மவுண்ட் ரோடு) இவர்கள் ரிட்டையர் ஆனதை முன்னிட்டு, 1956-ம் ஆண்டு ஜூலை மாதம் 21-ம் தேதி சனிக்கிழமை மாலை 6-30 மணிக்கு சென்னை மவுண்ட்ரோட் மகாஜன சபாவில், திரு. சி. ஆர். தேவராஜ் முதலியார் தலைமையில் பிரிவு உபசார விருந்து வழங்கப்பட்டது.

அவ்வமயம் ஜி. வேணுகோபால் அவர்கட்கு, திருமதி எல். சரஸ்வதி பிரிவு உபசார பத்திரம் வாசித்து அளித்தார்.

புருஷோத்தமர்க்கு பிரிவு உபசார பத்திரம், திருமதி எ. என். பத்மாவதி வாசித்தளித்து தந்தார்.

அடுத்தபடியாக கனம். சி. டி. டேவிட் (சப்போஸ்ட்மாஸ்டர் மவுண்ட்ரோடு) ஜி. வேணுகோபால் அவர்களுக்கு இரண்டு வெள்ளி குத்துவிளக்குகளும், பின்னர் புருஷோத்தமர் அவர்களுக்கு ஒரு கடிகாரமும், மேற்படி சொஸைட்டி சார்பில் பரிசளித்தார்.

பிறகு எம். முனுசாமி முதலியார், எம். ஏ. ரஜாக்ஷ இருவரையும் பாராட்டி பேசினார்கள். மேலும் திரு. ஜி. ஆர். எல், ராவ், டி. சந்தானம், அகில இந்திய தபால் ஊழியர் சங்க சார்ப்பில் வாழ்த்துகளையும், மாலைகளும் சூட்டினார்கள். கடைசியில் அனைவருக்கும் ஷை சொசைட்டி சார்பில் செயளாலர் மா, வி. சிதம்பரம் வந்தனம்கூறி நிகழ்ச்சி முடிவடைந்தது.

மா. வ. சிதம்பரம்
செயளாலர்.